திரு எஸ். கணேசன் : பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கள்ளச் சினிமா டிக்கெட்டுகள் விற்பனையில் திரையரங்கு நிர்வாகிகளுக்கும், அங்கே பாதுகாப்புக்காகச் செல்லுகின்ற சில காவலர்களுக்கும் ஈடுபாடு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ரசிகர் மன்றத்தின் தலைவர்களுக்கும் தொடர்பு இருப்பதாக நம்பப்படுகிறது. இதுபற்றி அரசு அறியுமா? இதன் மீது நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கி. மனோகரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு என்னிடத்தில் முழுத் தகவல் இல்லை. ஆனாலும் சில தகவல்களை அவைக்குத் தர விரும்புகிறேன்.

தமிழ் நாடு படக்காட்சி விதி 52-ஏ-யின் கீழ் உரிமம் பெற்றவர் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட ஏஜன்ட் இவர்களைத் தவிர வேறு எவரும் படக்காட்சி டிக்கட்டுகள் விற்கவோ, கொடுக்கவோ விற்பனைக்காக வைத்திருப்பதோ கூடாது. படக்காட்சி கொட்டகைகளில் விற்பனை அலுவலகத்தில் மட்டும்தான் விற்கப் பட வேண்டும். மேலும், வரிசையில் நிற்கும் நபர்களுக்குத்தான் கொடுக்கப்பட வேண்டும்.

பொது நன்மைக்காக காட்டப்படும் காட்சிகளுக்கு விற்பனை அலுவலகத்தைத் தவிர வெளியில் விற்க, உரிமை வழங்கும் அதிகாரம் உரிமம் வழங்கும் அதிகாரிகளுக்கு உண்டு.

இது போதும் என்று கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆரம்பத்தில் கேட்ட கேள்விக்கு என்னிடத்தில் பதில் இல்லை.

தீயணைப்பு நிலையங்கள்.

* வினு 162—திரு ரெ. வீ. சவுந்திரராஜன் : மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பாபநாசம் வட்டம், பாபநாசத்தில் தீயணைப்புப் படையின் பிரிவு ஒன்றை ஏற்படுத்தும் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு கி. மனோகரன் : இல்லை.

* வினு 163—திரு கே. சுப்பிரவேலு : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா :

சீர்காழி நகரத்தில் தீயணைப்பு நிலையம் ஒன்று ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு கி. மனோகரன் : சீர்காழி உள்பட 52 நகரங்களில் தீயணைப்பு நிலையங்கள் அமைக்க தீயணைப்புத்துறை இயக்குநரால் அனுப்பப்பட்ட பட்டியல் ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.